விக்னேஸ்வரா கல்லூரி நூல் நிலையம்
கரவெட்டி

## யா/விக்னேஸ்வரக் கல்லூரி கரவெட்டி,

## பரிசளிப்பு விழா - 2018

# நிறுவுநர் நினைவுப் பேருரை

வடபகுதி மக்களின் தற்கால உள சமூகவியல் பாதிப்பினை
உருவாக்கும் பொருளாதார சிக்கல்களைப் புரிதல்

**நினைவுரை நிகழ்த்துபவர்**

**வைத்திய கலாநிதி. கனகரத்தினம் சிவசுதன்**

( உளநல சிகிச்சைப் பிரவு, ஆதார வைத்தியசாலை,

பருத்தித்துறை. )

30.06.2018

# வடபகுதி மக்களின் தற்கால உள சமூகவாழ்வில் பாதிப்பினை உருவாக்கும் பொருளாதார சிக்கல்களைப் புரிதல்

விக்னேஸ்வரா கல்லூரி நூல் நிலையம் கரவெட்டி
இல. ..........

வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தில் ஒரு காத்திரமான பங்களிப்பை ஒரு நூற்றாண்டு காலமாக வழங்கி வருகின்ற எம் விக்னேஸ்வரக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நினைவுப் பேருரையாற்றுவது பெருமை மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் தருணம் ஆகும். இக் கல்லூரியானது 1917 ஆம் ஆண்டு அப்போதைய தென்மராட்சி பிரதேச முதலியாராக கடமையாற்றிய **அமரர் இராசவாசல முதலியார் வீரவாகு சிற்றம்பலம்** அவர்களால் நிறுவப்பட்டு, இன்று வரை நூற்றாண்டு கடந்த பெருமையோடு சமூகத்திற்கு சிறப்பான கல்விப்பணியாற்றி வருகிறது. நிறுவுநரின் நினைவாக வருடந்தோறும் நிகழ்த்தப்படும் இந்த உரையை ஆற்றுவதிலே பெருமகிழ்வடைகின்றேன். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் குழுமியிருக்கின்ற இந்த வேளையில், நாம் எதிர்நோக்கியுள்ள சமூக பொருளாதார சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கான தருணமாக இதனை பயன்படுத்தலாமென எண்ணுகின்றேன்.

உள்நாட்டில் முப்பதாண்டு காலமாக நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்திய போரானது முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஒன்பது வருடங்கள் கழிவடைந்த நிலையில் வடபகுதி மக்கள் சமூகமானது வெளியுலகுடன் இணைந்து பயணிப்பதற்காக தன்னை தகவமைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்கின்ற காலப்பகுதியாக இந்தக் காலப்பகுதி அமைகின்றது. போரின் பின்னான இந்த திறந்து விடப்பட்ட தன்மையானது அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் அதே நேரம் பல்வேறுபட்ட சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளையும் ஒன்று சேரக் கொண்டு வருகின்றது. மாறுதலடையும் உலக ஒழுங்கு மாற்றத்திற்கேற்ப அதன் தாக்கங்கள் நமது நிலத்திலும் எதிரொலிப்பதை காண்கின்றோம். நாமாகவே உருவாக்கிக் கொள்கின்ற பிரச்சினைகளுக்கு மேலதிகமாக திறந்து விடப்பட்ட உலகமும் எம்முள் பிரச்சினைகளை கொண்டு வருகின்றது. வடபகுதியின் உளசமூக பிரச்சினைகளின் தற்போதைய போக்கில் பொருளாதார பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கீட்டை எதிர்கொள்ள முடியாத தன்மையானது பிரதானமாகக் காணப்படுகின்றது. இதன் விளைவாக தற்கொலை முயற்சிகள், குடும்ப உறவுகளில் சிக்கல்கள், கல்வி, வேலையில் ஆர்வம் குறைவடைதல், நடத்தைக் குறைபாடுகள், போதைக்கு அடிமையாதல் என்பன அதிகரித்து செல்வதை

நாம் காண முடிகின்றது. இவ்வாறான உளசமூகப் பிரச்சினைகளுக்கு இடையீட்டினை மேற்கொள்ளும் போது இவை ஒன்றொடொன்று தொடர்புபட்ட சிக்கலான சங்கிலிகளாக நீள்கின்றன. இதில் தீர்க்கமுடியாத பகுதியாக பெரிதும் அமைவது பொருளாதாரப் பிரச்சினையாகும்.

உதாரணமாக ஒரு பிள்ளையின் கற்றல் ஆர்வம் குறைவடைகின்றது என்ற விடயத்தை ஆராயப் போகும் போது அதன் குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினைகள் வெளிப்படுகின்றன. குடும்பத்தின் வருமானம் குறைவடைதல், இதன் விளைவாக கடன்களில் சிக்குதல்,தாய், தந்தையருக்கிடையிலான உறவு முரண்கள், அதனால் தற்கொலைமுயற்சிகள் என்றவாறு பிரச்சினைகள் தொடர்கின்றன.

இந்த பிரச்சினைகளிலிருந்து குடும்பங்களை அல்லது சமூகத்தை மீட்பதானால் அதன் அடிப்படையான பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் உண்மையான தீர்வினை குடும்பம் அல்லது தனிநபரினால் பெற்றுக்கொள்ள முடியாமல் போகின்றது.

சரிந்து வரும் நமது சமூகத்தின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் இப்பொழுது இயங்குகின்ற முறையை புரிந்து கொள்ளுதலும் நமது பொருளாதாரம் சமூகம் சார்ந்த சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்துதலும் இன்றியமையாததாகும்.

## நம்மை நாமே புரிந்து கொள்ளுதல்

வடபகுதி மக்களின் பொருளாதார அமைப்பானது போரின் போதான காலப்பகுதியில் ஒரு விதமானதாகவும் பின்னான காலப்பகுதியில் இன்னொரு பாணியிலானதாகவும் காணப்படுவதனை அவதானிக்க முடியும். வடபகுதி மக்களின் தற்போதைய பொருளாதார அடிப்படைத்தளம் குறிப்பிட்ட சில பிரதான வருமான வழிகளில் மட்டுமே தங்கியுள்ளது. இதில் பிரதானமாக அமைவது அரச உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்படும் ஊதியமாகும் . இரண்டாவது புலம் பெயர் உறவுகளிலிருந்து நேரடியான நேரடியற்ற வழிகளில் பெற்றுக்கொள்ளப்படும் பணம். இவை தவிர்த்த வருமானவழியாக உள்ளூர் உற்பத்திகளான விவசாய, கடலுணவுகளின் ஏற்றுமதி அமைகின்றது. இவை தவிர தொழில்துறைப் பொருட்களின் ஏற்றுமதியானது மிக மிக குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. பெருமளவில் மத்தியதரவர்க்கம் சார்ந்த பொருளாதார அமைப்பு விரைவான மாற்றங்களை இலகுவாக உள்வாங்காததாக காணப்படுகின்றது. அரச உத்தியோகத்தரின் சம்பளம்,

மட்டுப்படுத்தப்பட்ட விவசாய கடலுணவுப் பொருட்களின் விற்பனை என்பனவற்றில் தங்குவதனால் வருடாவருடம் அதிகரித்துவரும் செலவினத்துக்கு ஏற்ப தமது வருமான மட்டத்தை அதிகரித்துக் கொள்ள முடியாத பொருளாதார அமைப்பாக இது காணப்படுகின்றது. நாட்டை பொறுத்த அளவில் போரின் பின்னால் அதிகரித்த சுற்றுலாத்துறை வளர்ச்சிவீதமானது காணப்படுகின்றது. எனினும் இந்தவருமான அதிகரிப்பானது வடபகுதியை அதிகஅளவில் அடையமுடியவில்லை. நாம் இலங்கையின் தலைநகரிலிருந்து தொலைதூரத்தில் காணப்படுவதும் சுற்றுலா தொடர்பான தொழில்வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளும் மனநிலையற்றிருப்பதும் இதற்கான காரணங்களாகும். எமது பொருளாதார மந்த நிலைக்கு பிரதான காரணமாக அமைவது மத்தியதர வர்க்க மனோநிலையாகும். பணப்புழக்கம் கூடிய வியாபார அமைப்பை மறுதலித்து அரசாங்க வேலை வாய்ப்புக்களை நோக்கி திசைப்படுத்தப்பட்ட கல்வித்துறையும் மக்களின் மனோபாவமும் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைகின்றன. இதைப் புரிந்து கொள்வதற்கு நம்மைப் பற்றி நாமே சிந்தித்து பார்க்கத் தெரிந்து கொள்ள வேண்டும். பிற சமூகங்கள் எவ்வாறு பொருளாதாரத்தைக் கையாள்கின்றன என்ற ஒப்பீட்டு சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். காலத்துடன் சமூகத்தின் பொருளாதாரம் எவ்வாறு மாற்றம் பெறுகின்றது என்ற விமர்சனப் பார்வையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ இயங்கிக் கொண்டிருக்கின்ற முதலாளித்துவ பொருளாதார அமைப்பானது வியாபார அமைப்புக்களின் வெற்றியின் மூலமே கட்டமைக்கப்படுகின்றது என்ற நடைமுறை யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### பிரதேச சேமிப்பின் விரயம்

வடபகுதி மக்கள் சிறுகச் சிறுகச் சேமித்து வாழ்தலுக்கு பெயர் பெற்றவர்களான காலம் ஒன்று இருந்தது. உக்கிரமான போர்ச்சூழலிலும் அரசாங்கத்தின் பொருளாதார தடைக்கு மத்தியிலும் வடபகுதி மக்கள் தாக்குபிடித்து நின்றமை அனைவரும் அறிந்தவிடயமாகும். மண்ணெய் லீற்றர் முந்நூறு ரூபாவுக்கு விற்ற காலப்பகுதியிலும் ஜாம்போத்தல் விளக்குகளை பயன்படுத்தி தமது நாளாந்த அலுவல்களை முழுமையாக ஆற்றிய மக்கள் அவர்கள். இதற்கு பக்கபலமாக அமைந்தது போரிற்கு முன்னான காலப்பகுதியில் மக்கள் சேமித்துச் சேர்த்து வைத்த பணமும் போரின்போதான காலப்பகுதியில் புலம்பெயர் உறவுகளின் பணமும் ஆகும். உள்ளூர் உற்பத்திகளை பயன்படுத்தியமை, தேவைகளை மட்டுப்படுத்திக் கொண்டமை, வளங்களை மீளமீள

பயன்படுத்திக் கொண்டமை, தேவைகளுக்கான மாற்று மூலங்களை கண்டு கொண்டமை என்கின்ற முறைகளினூடாக நம்மை நாமே காத்துக் கொண்டோம்.

எனினும் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட ஒன்பது வருடங்களில் மக்களின் சேமிப்பானது கரைந்து கடனாளியாக மாறிப் போன சமூகமாக இது காணப்படுகின்றது. போரின் முடிவானது பொருளாதார வாய்ப்புக்களையும் அதேசமயம் அபாயங்களையும் வடபகுதிக்கு திறந்து விட்டது. இதில் முக்கிய ஆபத்தாக தேவையற்ற ஆடம்பர வாழ்க்கை முறையின் பழகிக்கொண்டமை பிரதான போக்காகும். பொருட்களை வாங்கி குவிக்கின்ற நுகர்வுக் கலாசாரத்துக்கு திடீரென வெளிக்காட்டப்பட்ட சமூகம் கட்டுப்பாடற்ற முறையில் இந்தக் கலாசாரத்துக்கு அடிமையாகிச் செல்வதைக் காணமுடிகின்றது. கொண்டாட்டங்களில் பணவிரயம் செய்யும் கலாசாரம் உருவாக்கப்பட்டு வருகின்றது. இது ஊடகங்களால் முக்கியமாக இந்திய தொலைக்காட்சிகள், சினிமா என்பவற்றால் ஊக்குவிக்கப்படுகின்றது. பிற சமூகத்தவர்களின் வாழ்க்கை முறையை பின்பற்றுதல், புலம் பெயர் நாடுகளில் வாழ்பவர்களுடன் தம்மை ஒப்பிட்டு வாழ்தல் என்பன இதனை ஊக்குவிக்கின்றன. முன்பு மக்கள் ஆடம்பர செலவு செய்பவரை மதிப்பதில்லை. குடும்ப உறுப்பினர்கள் கூட அவரை விமர்சனம் செய்வர். இன்றோ ஆடம்பர செயற்பாடுகள் வியந்து பார்க்கப்படுவதுடன் அவை மற்றவர்களால் பின்பற்றப்பட்டும் வருவதனைக் காணலாம்.

சுய வருமானமற்ற இளைஞர்களின் மோட்டார் சைக்கிள், ஸ்மார்ட் போன் பாவனை. அழகுசாதனப் பொருட்களின் அளவுக்கு மீறிய பயன்பாடு, வியாபாரநிறுவனங்களின் இருப்புக்களின் மிகையான அதிகரிப்பு, அலுவலகங்களில் பார்ட்டிகலாசாரம், இலவசமாக பெற்றுக்கொள்ள கூடிய மருத்துவ, கல்விசேவைகளுக்காக தனியார் துறைக்கு பணவிரயம் செய்தல். பிளாஸ்ரிக் பொருட்களின் அதிகரித்த கொள்வனவு . கோவில்களை வீடுகளை அழகுபடுத்துவதாக கூறிக்கொண்டு மீளமீள புனர்நிர்மாணம் செய்தல் ஆகிய பலவிதமான உதாரணங்களை சமூகத்தின் சேமிப்பை கரைக்கும் செயற்பாடுகளாக நாம் பட்டியலிட முடியும்.

### அதிகரித்த நுகர்வும் தகுதிக்கு மீறிய செலவும்

இங்கு யார் அதிக செலவுகளை செய்கிறார்கள் என்றால் யார் வருமானமற்றவர்களோ தங்கிவாழ்பவர்களோ அவர்களே. உதாரணமாக இளைஞர்கள், யுவதிகள். இவர்கள் தாங்கள் தொழில் ஒன்றிற்கு போய் சம்பாதிப்பதற்கு முன்பாகவே

தேவையற்ற செலவுகளை செய்ய தொடங்குகிறார்கள். இவர்களின் வாழ்க்கை முறையை நுகர்வுக் கலாசாரம் சீரழிக்கின்றது. இன்று உயர்தர, பல்கலைக்கழக மாணவர்களை எடுத்துக் கொண்டால் பார்ட்டி கலாசாரத்துக்கு மோட்டார் சைக்கிளுக்கு ஸ்மார்ட்போன்களுக்கு என பெற்றோர்களின் பணமானது விரயமாக்கப்படுகின்றது. கடன் வாங்கியாவது பிறரைப் போன்று நடித்து வாழ வேண்டிய மனோநிலை இளைஞர்களை ஆட்டிப்படைக்கின்றது.

### பெருமை பேசும் வீண் செலவுகள்

மற்றவர்களை பார்த்து அது போன்ற வாழ்க்கை முறையில் வாழ பாவனை செய்தல் பெரும் பணவிரயத்தை ஏற்படுத்தி வருகின்றது. வாகனங்கள், ஸ்மார்ட் போன்களை வாங்குதலும் புதிய மொடல்களை மாற்றுவதும் இளைஞர்களிடம் ஒரு போதைப்பழக்கம் போல தொற்றிக் கொண்டுள்ளது. இவ்வாறே உடைகளை குறுகிய காலப் பாணிகளுக்கு ஏற்ப மாற்றுதல், கைப்பைகள், அழகு சாதனப் பொருட்களை மாற்றுதல் என்பனவற்றில் பெண்கள் ஈடுபடுகின்றார்கள். தொலைக்காட்சி விளம்பரங்கள் இந்த அடிமைத்தனத்தை வளர்க்கின்றன. விளம்பர மாயையில் சிக்கியுள்ள தாய்மார்கள் வேறுபட்ட வகையான பால்மாக்களை வாங்கி வளரும் பிள்ளைகளிடம் திணிக்கிறார்கள். அன்பு என்ற பெயரில் குழந்தைகளிடம் திணிக்கப்படுகின்ற பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருட்களின் நச்சுத்தன்மை இந்த மக்களுக்கு தெரிவதில்லை. சிற்றுண்டி என்று தினமும் வாங்கப்படுகின்ற பக்கட் உணவுகள் வீண் பணவிரயத்தையும் நச்சுப்பொருட்கள் குறிப்பாக புற்றுநோய் இரசாயனங்களை உள்ளெடுத்தலையும் ஏற்படுத்துகின்றன.

நாளாந்த பாவனைப் பொருட்களை தவிர்த்து பார்ட்டி கலாசாரம், கொண்டாட்ட கலாசாரம் சமூகத்தை பிடித்து ஆட்டுகின்றது. ஒரு அரசாங்க அலுவலகத்தில் ஒன்று கூடல் ஒன்று நிகழும்போது அது அலுவலக ரீதியானதாக இருந்தாலும் சிற்றுண்டிகள் இல்லாமல் இப்பொழுது நடைபெறுவது இல்லை. ஒவ்வொரு பிறந்த நாள் கொண்டாட்டங்களும் ஆடம்பரமாக செய்யப்படுகின்றன. வர்த்தகத்துறையினரை பொறுத்தவரை இவை மதுவுடனான ஒன்றுகூடல்களாக இருக்கின்றன. இந்த கலாசாரத்தை புலம்பெயர் உறவுகளும் விடுமுறைக்கு நாட்டிற்கு திரும்பும்போது ஊக்குவிக்கின்றார்கள். பாபிக்கியு பார்ட்டிகள் மதுவுடன் கொண்டாடப்படுகின்றன.

வீடுகள், கோவில்கள் அழகுபடுத்துதல் என்ற பெயரில் மீள மீள புதுப்பிக்கப்படுகின்றன. இவை ஒரு பத்து வருடங்களில் பழமையானவையாக

கருதப்பட்டுவிடும் என்ற உணர்வின்றி பணம் விரயமாக்கப்படுகின்றது. நிதி சேகரிப்போர் எனும் குழுவினர் இந்த செயல்முறைகளை ஊக்குவிக்கின்றார்கள். தற்பெருமை அல்லது தரகுப் பணம் இவர்களை வழிநடத்தி செல்கின்றது.

கோவில் நிகழ்வுகளில் அதிகரித்த அலங்காரங்கள் , தொலைக்காட்சி பிரபலங்களை இந்தியாவிலிருந்து அழைத்தல், வீண் ஆடம்பரக் கட்டுமானங்கள் என பிரதேச சேமிப்பானது கரைகின்றது.

இவற்றுக்கான செலவுகளில் பெரும்பகுதி நேரடியற்ற முறையில் புலம்பெயர் உறவுகளிலிருந்து பெறப்படுகின்றது. உண்மையில் சமூகத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டிய பல்வேறு வழிகளுக்கு நிதியானது தேவைப்படும் வேளை இவ்வாறான ஆடம்பர கேளிக்கை கொண்டாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அவற்றுக்கென விரயமாக்கப்படும் நிதி குறித்த பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படலாம்.

### திசை தெரியாத இளம் தலைமுறை , தொழில் வழிகாட்டலில்லை, ஆளுமைவளர்ச்சியின்மை, அடிமைத்தனம்

இன்றைய இளம் தலைமுறைக்கு தொழில் சார் வழிகாட்டல் முறையாக செய்யப்படுவதில்லை. சிறுவயதில் பணத்தின் மதிப்பு பணத்தை கையாளுவதில் பயிற்சி வழங்கப்படுவதில்லை. பணம் கையில் கொடுக்கப்படுவதில்லை. பணத்தை கையாள பயிற்றப்படாத இளைஞருக்கு பதின்மபருவத்தில் அது திடீரென கொடுக்கப்படுகின்றபோது தேவையற்ற செலவுகளை செய்வதனை பார்க்கின்றோம். படித்தால்தான் பணத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று பெருமளவான சிறார்களுக்கு பெற்றோர்கள் சொல்லி வளர்ப்பதை பார்க்கின்றோம். கல்வி மூலம் மட்டுமே தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்று இளைஞர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இந்த போட்டியில் தோற்றவர்கள்..அதாவது க.பொ.த உயர்தரத்தில், சாதாரண தரத்தில் பரீட்சைகளில் தோல்வியடைந்த பெருமளவு இளைஞர்களுக்கு இந்த சமூகத்திடமிருந்து பதிலில்லை. (பல்கலைக்கழகத்துக்கு தேர்வானவர்களுக்கே வேலை வாய்ப்புக்கள் அருகி வருவது வேறு விடயம்) பரீட்சைகளில் தோற்றவர்கள் விழுந்து விட்டவர்களாக நோக்கப்படுகின்றார்கள். வேலைக்கான போட்டியில் அவர்கள் விருப்பமற்ற தொழில்களை தேர்வு செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அதில் ஈடுபாடற்று செயல்புரிகின்றார்கள். முன்பு விழுந்து விட்ட இளைஞர்களுக்கு அகதிகளாக வெளிநாடு செல்லுதல் என்ற

வழி காணப்பட்டது. இன்று இந்த வழி பெருமளவு அடைக்கப்பட்டு விட்ட நிலையிலும் இது புரியாது போலி முகவர்களிடம் பணத்தை கொடுத்து ஏமாறும் நிலையில் மக்கள் காணப்படுவது வேதனைக்குரியது.

இன்றைய கல்விமுறை இளைஞர்களுக்கு யதார்த்தமான சமூகப் போக்கை புரிந்துகொள்ள வழி செய்வதில்லை. விழுந்து எழுந்து கற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். தனக்கு தேவையான ஒருதொழிலை கற்றுக்கொள்ளும் சுயமாக தொழில் வாய்ப்பை உருவாக்கும் ஆளுமை வளர்ச்சியை கல்வித்துறை உருவாக்கிக் கொடுப்பதில்லை. தேசிய தொழிற்பயிற்சி தகைமைகளை (NVQ) பெற்றுக்கொள்ளக் கூடிய பயிற்சிகளை பற்றிய விழிப்புணர்வை பாடசாலைகள் செய்வதில்லை. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது இதற்கான பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வருவதுடன் தென்னிலங்கையில் பல தனியார் நிறுவனங்களும் தனியார் துறைக்கு தேவையான பயிற்சிகளை அளிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான போட்டியில் தொழில்திறன்வழி இடப்பெயர்வு (Skill migration) என்ற மாற்றுவழியை வடபகுதி இளைஞர்கள் பயன்படுத்துவது மிகக் குறைவாக உள்ளது.

**தொழில் வாய்ப்புக்களை பெருக்காமை**

நுகர்வுக் கலாசாரம் அதிகரித்து காணப்படும் போதும் நாம் நமக்குள் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துள்ளோமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். இந்த பிரதேசம் போரின் பின்னால் வெளியுலகுக்கு திறந்து விடப்படும்போது இங்குள்ள புதிய வியாபார வாய்ப்புக்களை தென்னிலங்கை வர்த்தகர்களே முழுமையாக பாவிப்பதனை கண்டுகொள்ள முடியும். வியாபார நுட்பங்களில் அறியாமை, புதிய வாய்ப்புக்களை முயன்று பார்ப்பதில் தயக்கம், தென்னிலங்கையுடன் இன்னமும் இருக்கின்ற இடைவெளி என்பன இதற்கு காரணங்களாகலாம். உதாரணமாக புதிதாக வெளியுலகுக்கு திறக்கப்பட்ட பிரதேசத்தில் பெருமளவு மீள் சுழற்சிசெய்யக் கூடிய கழிவு உலோகப் பொருட்களின் இருப்பானது காணப்பட்ட போதிலும் இது சார்ந்த வியாபாரமானது தென்னிலங்கை வர்த்தகர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அதைப்பற்றிய அறிவின்மை தொடர்புகள் இன்மை என்பவற்றால் பிரதேச மக்கள் அதில் ஈடுபடாமல் இருப்பதை காணலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட சந்தையை கொண்டுள்ள வடபகுதியில் குறிப்பிட்ட வகையான வியாபாரத்தில் பலர் போட்டியிட்டு விலைக்குறைப்புக்களை செய்து தோல்வியுறுவதை நாளாந்தம் காண்கின்றோம். தென்னிலங்கையானது வடபகுதியிலும் பார்க்க பன்மடங்கான பருமனைக் கொண்ட சந்தையை கொண்டிருக்கின்ற போதிலும் நம்மவர்கள் அங்கே வியாபாரங்களை விஸ்தரிப்பது குறைவாக காணப்படுகின்றது. மொழியறிவின்மை, புதிய வாய்ப்புக்களை சோதித்து பார்ப்பதில் தயக்கம், போட்டியிடுவதில் தயக்கம் என்பன தெற்கைத் தளமாகக் கொண்டு வியாபார நடவடிக்கைகளை செய்வதற்கான நமது பார்வையை மட்டுப்படுத்துகின்றது. வியாபார நடவடிக்கைகளை காலத்துக்கேற்ப திட்டமிடுகின்ற காலத்துக்குக் காலம் மாற்றிக்கொள்கின்ற எதிர்காலத்தை எதிர்வு கூறி முயற்சிகளை ஆற்றுகின்ற முஸ்லிம் சகோதரர்களின் வழிமுறைகளை நாமும் பயின்று கொள்ளுதல் காலத்தின் தேவையாக இருக்கின்றது.

### தொழில் நுட்ப அறிவுக் குறைபாடு

மாறிவரும் உலகின் தேவைகளுக்கேற்ப போட்டியிடக் கூடியதான தொழில் நுட்ப அறிவு குறைவாக காணப்படுவது இன்னொரு குறைபாடாகும். தொழில் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவு, காலத்துடன் தன்னை புதுப்பித்துக் கொள்ளாத சிந்தனை முறை, இயந்திரங்களை பாவிப்பதில் தயக்கம் என்பன தொழில் நுட்பம் சார்ந்த அறிவு விருத்தியை மட்டுப்படுத்துகின்றன. உலகமெங்கும் எமது உறவுகள் பரந்து காணப்பட்ட போதிலும் புலம் பெயர் நாடுகளிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொள்ளப்படும் தொழில் நுட்ப அறிவானது குறைவாகவே காணப்படுகின்றது. ஒரு புதிய நுட்பமானது இலங்கைக்கு வருவதானால் கொழும்பிற்கு வந்து பின்னர் நாட்டின் பிறபாகங்களுக்கு வருவதன் வழியாகவே வடபகுதிக்குள் நுழைகின்றது. இந்த நுட்பங்களை தொழில் துறையில் உட்புகுத்துவதற்கு அதனைக் கற்றுக் கொள்வதற்கு சமூகத்திற்கு தேவையான தொழில் நுட்பமானது கல்விப்புலத்தில் பயிற்றுவிக்கப்படாமையும் குறைபாடாகும்.

### வர்த்தக சூதாட்டங்களில் ஏமாறுதல்

போரின்பின்னான காலப்பகுதியில் பிரதேசமானது வெளியுலகுக்கு திறந்து விடப்பட்ட பின் உருவான மிகப்பெரும் அபாயமானது நிதி நிறுவனங்களின் பிரவேசமாகும். பிரதேசத்தின் சேமிப்பானது மிகக் குறுகிய காலத்தில் சுரண்டல் முறையில் அபகரித்து

செல்லப்பட்டுள்ளது. மக்களின் மனோநிலையை மாற்றி கடன் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ள இந்த நிதிநிறுவனங்கள் வெளிப்பார்வைக்கு உதவுவது போல தெரிந்தாலும் ஒட்டு மொத்தமாக சமூக அடிப்படையில் பார்க்கும்போது பணமானது பிரதேசத்தை விட்டு சுரண்டப்பட்டு செல்வதை அவதானிக்க முடியும். இலகுவாக கடன் கொடுத்து விட்டு பிறகு வட்டியுடன் கட்டி முடிப்பதற்கு ஊக்குவிக்கும் நிதிநிறுவனங்கள் தேவையற்ற ஆடம்பர செலவுகளுள் மக்களை தள்ளி விடுகின்றன. முன்பு ஒரு உண்மையான தேவை இருக்கும்போதே ஒருவர் கடன் வாங்குவதை காணலாம். இன்று வீண் இடாம்பீக செலவுகளுக்கும் கடன் வாங்கும் பழக்கமானது ஊக்குவிக்கப்படுகின்றது. இலகுவாக கடன் கிடைப்பதே இதன் காரணமாகும். வாகன லீசிங் என்ற மாயையில் ஆண்களில் பெரும்பாலானோரும் தங்க நகை அடைவு என்று பெண்களும் பொருட்களின் பெறுமிக்கு மேலதிகமான வட்டியை செலுத்தி வருவதை காண முடிகின்றது. வியாபாரத்தை விஸ்தரிப்பது என்ற பெயரில் வீண் பகட்டுக்களுக்காக வங்கிக்கடன்களை வாங்கும் வியாபாரிகளும் இவர்களை போன்றவர்களே. பங்கு மார்க்கெட் சூதாட்டங்கள் வங்கிகளால் ஊக்கு விக்கப்படுகின்றன. பிரமிட் முறை சூதாட்ட கும்பல்கள் (தற்போது அதன் பெயர் குளோபல்) , வேலைவாய்ப்பை அல்லது வெளிநாட்டு பயணத்தை பெற்றுத் தருவதாக நேர்மையற்ற வழிகளில் இளைஞர்களை திருப்பும் மோசடிப் பேர்வழிகள் என்போர் இன்னொரு புறம் சமூகத்தின் சேமிப்பை சூறையாடுகின்றனர்.

**உள்ளூர் உற்பத்திகளை புறக்கணித்தல்**

தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதில் முக்கிய சிக்கலாக காணப்படுவது உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்வதை நாமே புறக்கணிப்பதாகும். விளம்பரங்களால் ஊக்குவிக்கப்படும் மக்கள் பிராண்ட் அடிக்சன் எனப்படும் வியாபாரக் குறிகளுக்கு அடிமையாவதை காணக் கூடியதாக இருக்கின்றது. ரெடிமேட் உடைகள், கைப்பைகள், பாதணிகள் என உடனடியாக அழிவடையக் கூடிய வடிவமைப்பு மாற்றம் பெறுகின்ற பொருட்கள் வாங்கிக் குவிக்கப்படுகின்றன. இவை முன்பு உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் பெறப்பட்டன. தளபாடங்களில் கூட நீடித்து உழைக்கின்ற தன்மையை விட்டு அலங்கார தளபாடங்களை வாங்கி பயன்படுத்துவது பெருமைமிகுந்த ஒன்றாக மாறிவிட்டது. மக்கள் வெளியூர் பொருட்களை வாங்குவதற்கு ஒரு காரணமாக உள்ளூர் உற்பத்திகள் விலை மிகுந்தவையாக இருப்பதாக சொல்லுவதை காணலாம். போராட்ட காலத்தில் பன்மடங்கு விலையில் பொருட்களை பெற்ற ஒரு சமூகம் சிறிய சில்லறை விலை வித்தியாசத்தை பெரிதாக காட்டுவது நகைப்புக்கிடமான விடயமாகும். ஒரே

பொருளை அருகில் உள்ள உள்ளூர் வியாபாரியின் கடையில் கொள்வனவு செய்யாமல் சிறிய விலை குறைவில் விற்கின்ற வெளியூர் வியாபாரியிடம் கொள்வனவு செய்வதை காணமுடிகின்றது. இது போல தேசிய அளவிலான பல்பொருள் அங்காடிகளை பயன்படுத்துவது, இணைய வணிகத்தை பயன்படுத்துவது என்பன உள்ளூர் வியாபாரத்தை பாதிப்படையச் செய்கின்றது.

**புலம் பெயர் உறவுகளிலிருந்து கிடைக்கின்ற பணம் குறைவடைதல்**

போராட்ட காலத்தில் பெருமளவான பணமானது புலம்பெயர்ந்து சென்ற உறவுகளிலிருந்து கிடைக்கப்பெற்றது. இந்தப் பணமே பெரும் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலும் மக்கள் தாக்குப்பிடிப்பதற்கான உந்து சக்தியை தந்தது. எனினும் போரின் பின்னான காலத்தில் தேவைக்கு மீறிய செலவினங்களை ஆற்றும் போக்கையும் இந்த பணம் ஊக்குவிப்பதை காண்கிறோம்.

புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் அடுத்த தலைமுறைக்கு தாயகத்துடனான தொடர்பு குறைவடைந்து விடுவதால் அவர்கள் உறவுகளுக்கு அனுப்புகின்ற பணமானது குறைவடைந்து செல்கின்றது. அது தவிர அவரவர் நாடுகில் ஏற்படுகின்ற அதிகரித்த பொருளாதார சுமைகள், வேலைப்பளு, வயதாவதனால் முன்பு போன்று அதிகநேரங்களை உழைப்பில் ஈடுபடுத்த முடியாமை, முதுமை காரணமாக ஏற்படும் செலவுகள் என்பவற்றை புலம்பெயர்ந்து சென்ற தலைமுறை அனுபவிக்க ஆரம்பிக்கின்றது. இதனாலும் அவர்கள் இங்கு செய்து கொண்டிருந்த உதவிகள் தடைப்படுகின்றன. இன்னொரு காரணமும் இதில் முக்கியமானது போராட்டத்தின் பின்னர் பல உறவுகள் தாயகம் திரும்பி இங்குள்ள வாழ்க்கை முறையை நேரடியாக பார்க்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது. அதன்பொழுது அவர்களின் கண்ணோட்டத்தில் நாம் செய்யும் செலவுகள் வீண் ஆடம்பரங்கள் என்பன வெறுப்பினை விதைக்கின்றன. இதே ஆடம்பரங்களை அவர்களும் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நாம் நமது வருமானத்துக்கு மீறியதாக செலவு செய்கின்றோம். இதனால் அவர்கள் முன்பு போல குடும்பங்களுக்கான உதவிகளை புரிவது குறைவடைகின்றது.

**பண வீக்கம்**

நாடு, முப்பது வருடகால போருக்கென இரண்டு சமூகங்களிலிருந்தும் திரட்டப்பட்ட நிதியை வீணடித்தது. சர்வதேச ஆயுத வியாபாரிகளே இந்த போரினால் நன்மை பெற்றார்கள். ஆயுதங்களை கொள்வனவு செய்ய, ஆயுதங்களால் அழிக்கப்பட்ட

வளங்களை புனர்நிர்மாணம் செய்ய, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக என பல்வேறு மட்டத்தில் பெருமளவு நிதியானது செலவழிக்கப்பட்டது. அரசாங்கம் இதற்கான செலவை வெளிநாட்டுக்கடன்களின் மூலம் பெற்றது. அது இலங்கை மக்கள் ஒவ்வொருவரின் தலையிலும் சுமையாக இருக்கின்றது. இதில் நமது வருங்கால சந்ததியின் தலையிலும் இந்த கடன்சுமையானது இறக்கப்பட்டுள்ளது. இவ்வளவு வீண் விரயத்துக்கு மத்தியிலும் எந்த அடிப்படைப் பிரச்சினைகள் இனப்போரை ஆரம்பித்தனவோ அவை தீர்க்கப்படவில்லை. எனவே இது தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக காணப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் உள்நாட்டு உற்பத்தியின் அளவானது வெளிநாட்டு இறக்குமதியினை ஈடு கட்ட முடியாத நிலையில் நுகர்வுக்கலாசாரத்தில் நாடே சிக்கியுள்ள நிலையில் அதை ஊக்குவிக்கும் அரசியல் தலைமைகள் உள்ள நிலையில் போரால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை ஈடு செய்ய பணத்தின் மதிப்பிறக்கத்தை தொடர்ந்து செய்ய வேண்டிய வக்கற்ற நிலையில் அரசாங்கமானது காணப்படுகின்றது. பணமதிப்பிறக்கத்துடன் பொருட்களின் விலைகள் உடனடியாக ஏறுவதனால் அதனால் மீளவும் நெருக்கடியை மக்கள் எதிர்நோக்குகின்றார்கள்.

**சிக்கல்களால் அதிகரிக்கும் தற்கொலை வீதம்**

அதிகரித்துவரும் பொருளாதாரப்பிரச்சினைகட்கு முகம் கொடுக்க முடியாமல் கடன் சிக்கலில் தத்தளிக்கும் குடும்பஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் தற்கொலை முயற்சியினை தீர்வாக கைக்கொள்ளும் போக்கு அதிகரித்து வருகின்றது. வைத்தியசாலை மருத்துவ உளநலப்பிரிவுகளினூடாக இவர்களுக்கு வைத்திய சேவை வழங்கப்படுகின்றது. பிரதேச செயலர் பிரிவுகளினூடாக உளவளத்துணையானது வழங்கப்படுகின்றது. எனினும் தற்கொலை முயற்சிகளின் மூலகாரணமான பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படும் வரை இவர்கள் மீளவும் தற்கொலைக்கு முயல்கின்ற அபாய நிலையில் உள்ளார்கள்.

**நிதிநெருக்கடி, குடும்ப சிக்கல்களிலிருந்து கணநேர விடுதலைக்கு போதைக்கு அடிமையாதல்**

அதிகரித்து வரும் உளநெருக்கடியை தீர்ப்பது என்ற நோக்கில் போதையின் பழக்கத்துக்கு ஆளாகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இது ஒரு நச்சு வட்டத்தினுள் அவர்களையும் அவர்கள் சார்ந்த குடும்ப உறவுகளையும் சிக்க வைக்கின்றது.

## தீர்வுகளை நோக்கி இணைந்து செயற்படுதல்

நமது சிந்தனை மற்றும் செயல் முறைகளில் மாற்றங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலமே இந்த பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நமது சமூகம் தப்பிப்பிழைக்க முடியும். தனிமனித வெற்றி தோல்விகளை விடுத்து சமூகமாக சிந்திப்பதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம். இதற்கான வலு நமது சமூகத்தினுள்ளேயே இருக்கின்றது. நிதி ஆதாரங்களையும் நாம் திரட்டிக்கொள்ள முடியும். இளைஞர்கள் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதில் பெற்றோர், ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கிய தேவையானதாக இருக்கின்றது. பரீட்சைகளை நோக்கி எல்லோரையும் வழிநடத்த வேண்டிய அவசியம் தேவையற்றதாகும். அதை விடுத்து எந்த சூழ்நிலைகளிலும் மாற்றங்களை திறனுடன் எதிர்கொள்ள மாணவர்களின் சுய ஆளுமை, தலைமைத்துவப் பண்புகளின் விருத்தியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். வியாபாரம் சார்ந்த , பணம் சார்ந்த விடயங்களை கலந்துரையாடுதல், புதிய தேவையான தொழில் முயற்சிகளுக்கு நிதி, உடல், உள ஆதரவினை வழங்குதல், பிரதேச உற்பத்திகளை ஊக்குவித்தல்,அவற்றினை பாவித்தல், கூடுமானவரை நாம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது பணமானது பிரதேசத்தினுள்ளேயே நிற்குமா அல்லது வெளியே செல்லுமா என்பதை கவனித்தல் என்பவற்றின் மூலம் உள்ளூர் வியாபாரத்தை, பணப்புழக்கத்தை ஊக்குவிக்க முடியும்.

தேவைகளுக்கும் ஆசைகளுக்குமான இடைவெளியை சிறுவர்களிடம் புரிய வைக்க வேண்டும். நமது சொந்த ஆடம்பரங்களை குறைத்துக் கொள்வதன் மூலம் நமது வாழ்க்கையை உதாரணமாக கைக்கொள்ள அவர்களுக்கு பழக்கலாம். அன்பு என்பது பொருட்களில் இருக்கும் ஒன்றல்ல என்பதை நமது பிள்ளைகளுக்கு புரிய வைக்க வேண்டும். நுகர்வுக் கலாசாரத்தின் அடிப்படை மற்றவர்களுடன் ஒப்பிடுவதில் ஆரம்பிக்கின்றது.

மற்றவர்களுடன் ஒப்பிட்டு பொருட்களை வாங்கிக் குவிப்பது தேவையற்ற ஒன்றென்பதையும் காலத்துடன் அந்த பொருட்களின் பெறுமதி குறைவடைந்து நம்மை நட்டமடைய வைக்கும் என்பதையும் இளைஞர்களுக்கு புரிய வைப்பது முக்கியமானதாகும். இதற்கு உதாரணமாக ஸ்மார்ட் போன்களின் மொடல்களின் விலை வருடாந்தம் வீழ்வதை குறிப்பிட்டுக் காட்டலாம்.

பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் அன்பும் கண்டிப்பும் ஒரு சமநிலையில் காணப்பட வேண்டும். இதன் மூலம் உணர்வு நிலைகளில் சமநிலையான பிள்ளைகளை நாம் உருவாக்க முடியும். பிள்ளைகளின் படிப்பில் காட்டும் அக்கறையை அவர்களின் நடத்தைக்குறைபாடுகளை கண்காணிப்பதில் அதற்கான இடையீடுகளை ஏற்படுத்துவதில் காண்பிக்க வேண்டும். பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமான தொடர்பாடலில் நடத்தை மாற்றத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டும். இதன் மூலம் தற்கொலை முயற்சிகள், போதைப்பழக்கம் என்பவற்றின் பிடியிலிருந்து இளைய சமுதாயத்தை விடுவித்துக் கொள்ள முடியும்.

புலம்பெயர் நாடுகளில் இருந்து நமக்கு கிடைக்கின்ற பணம் ஒரு முக்கியமான நிதித் திரட்டு ஆகும். இதனை தேவையற்ற விதங்களில் வீணடிக்காமல் குறிப்பிட்ட பிரதேசத்தில் தொழில் முயற்சிகளை தொடங்குவதில் முதலிடலாம். இதனால் குறித்த பிரதேச இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் கிட்டும். அதன் மூலம் அந்த பணமானது பெருகும் வாய்ப்பும் காணப்படுகின்றது. இவ்வாறான முன் முயற்சிகளுக்கு சமூக ஆதரவினை பெற்றுக் கொடுப்பதில் கற்றோர் எனப்படும் பெரியவர்கள் முன்நின்று உழைக்க வேண்டும். புலம்பெயர் மூலதனத்தை கொண்டமையும் தொழில் முயற்சிகளுக்கான தேசிய அரசியல் தடைகளை நீக்குவதில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையானது காணப்படுகின்றது. பொருளாதார வெற்றியே சமூக வெற்றியின் அடித்தளமாகும்.

போராட்ட காலத்தில் எவ்வாறு ஒரு பிரச்சினையை சமூகம் கூடி நின்று கையாண்டதோ அவ்வாறான கிராம மட்ட கூட்டு முயற்சிகள் உருவாக்கப்பட வேண்டும். சாதி, சமய, பிரதேசவாத, தலைமைத்துவப் போட்டிகளை தவிர்த்து இணைந்து செயற்பட்டால் நம்மை உலக அரங்கில் முன்நிறுத்தக் கூடிய வளமானது இன்னும் நம்முள் இருப்பதனை கண்டுகொள்ளலாம். இணைவோம். செயற்படுவோம். உயர்வோம்.

இல. ..........
கரவெட்டி